# அறிமுகத் தமிழ்

## முதல் நூல்

(புதுச்சேரி, காரைக்கால் கல்வி மாவட்டங்களில் தமிழை முதல் மொழியாகப் பயிலாத மாணவர்களுக்குத் தமிழைப் பயிற்றுவிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பெற்ற நூல்)

புதுவை அரசு கல்வித்துறை

# அறிமுகத் தமிழ்

## முதல் நூல்

(புதுச்சேரி, காரைக்கால் கல்வி மாவட்டங்களில் தமிழை முதல் மொழியாகப் பயிலாத மாணவர்களுக்குத் தமிழைப் பயிற்றுவிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பெற்ற நூல்)

புதுவை அரசு கல்வித்துறை

## புதுவை அரசு கல்வித்துறை

ஆசிரியர் குழு:

1. **கா. முத்துசாமி,**
   முதல்வர், அரசு தொழில்நுட்ப மேனிலைப்பள்ளி,
   இலாசுப்பேட்டை, புதுச்சேரி

2. **புலவர். வீ. அருணகிரி,**
   விரிவுரையாளர், சீவானந்தம் அரசு மேனிலைப்பள்ளி,
   காரமணிக்குப்பம், புதுச்சேரி

3. **முனைவர் இராச. திருமாவளவன்**
   விரிவுரையாளர், கலவைக் கல்லூரி அரசு மேனிலைப்பள்ளி,
   புதுச்சேரி

4. **சு. சேசாசலம்,**
   விரிவுரையாளர், கண்ணகி அரசு மேனிலைப்பள்ளி,
   வில்லியனூர், புதுச்சேரி

5. **புலவர் கி. இலட்சுமி நாராயணன்,**
   தமிழாசிரியர், தந்தை பெரியார் அரசு மேனிலைப்பள்ளி,
   அரியாங்குப்பம், புதுச்சேரி

6. **கா. தனுசு**
   தமிழாசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, கரையாம்புத்தூர்,

### ஓவிய ஆசிரியர்கள்:

1. **ஜெ. மணிகண்டன், ஓவிய ஆசிரியர்,**
   மணிமேகலை அரசு பெண்கள் மேனிலைப்பள்ளி,
   புதுச்சேரி.

2. **அ.தங்கராசு, ஓவிய ஆசிரியர்,**
   அரசு மேனிலைப்பள்ளி,
   தவளக்குப்பம், புதுச்சேரி.

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத் மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்

## நாட்டுப் பண் - பொருள்

இந்தியத் தாயே மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற
நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்
நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும்,
மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும்,
வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில்
எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின்
இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால்
வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே, உனக்கு
வெற்றி! வெற்றி! வெற்றி!

# தேசிய ஒருமைப்பாட்டு உறுதி மொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன் என்று உளமார நான் உறுதி கூறுகின்றேன்.

ஒரு போதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் - பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன் என்றும் நான் மேலும் உறுதியளிக்கின்றேன்.'

# உறுதிமொழி

'இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறப்புகள்.

என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்பிற்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன். எல்லோரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலே நான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்'.

# தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே
மாண்புகள் நீயே என்தமிழ்த் தாயே
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே
வீரனின் வீரமும், வெற்றியும் நீயே!

தாழ்ந்திடு நிலையினில் உனைவிடுப் பேனோ
தமிழன்எந் நாளும் தலைகுனி வேனோ
சூழ்ந்தின்பம் நல்கிடும் பைந்தமிழ் அன்னாய்
தோன்றுடல் நீஉயிர் நான்மறப் பேனோ?

செந்தமிழே! உயிரே! நறுந் தேனே
செயலினை மூச்சினை உனக்களித் தேனே
நைந்தா யெனில்நைந்து போகுமென் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே!

முந்திய நாளினில் அறிவும்இ லாது
மொய்த்தநன் மனிதராம் புதுப்புனல் மீது
செந்தாமரைக் காடு பூத்தது போலே
செழித்தஎன் தமிழே ஒளியே வாழி!

- புரட்சிக் கவிஞர் **பாரதிதாசன்**

# ஆசிரியருக்கு ....

"அறிமுகத் தமிழ்" என்ற பெயரோடு வெளிவரும் இத்தமிழ்ப் பாடநூல், புதுச்சேரி, காரைக்கால் கல்வி மாவட்டங்களில் பயிலும் மாணாக்கர்க்கென்றே உருவாக்கப் பெற்றது. எட்டாம் வகுப்பு வரையில் தமிழை முதல் மொழியாகப் பயிலாத மாணாக்கர்களுக்குத் தமிழ் மொழியைப் பயிற்றுவிக்கும் சீரிய நோக்கத்துடன் உருவாக்கப் பெற்றுள்ள இந்நூல், திருத்தி அமைக்கப் பெற்ற பாடத்திட்டத்தின் படி எழுதப் பெற்றுள்ளது.

மொழிப் பாடத்தில் மொழித்திறன் வளர்ச்சியே முதலிடம் பெறுகிறது. மொழியின் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், புரிந்துகொள்ளல், எளிய நடைமுறை இலக்கணம், தானே கற்றல், மொழியைப் பயன்படுத்துதல், சொல்லாட்சித் திறன் என ஒன்பது திறன் பகுதிகளாகத் தொகுக்கப் பெற்று இருபத்தொரு கற்றல் திறன்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இருபத்தொரு கற்றல் திறன்களிலும் ஒவ்வொரு மாணவனும் முழுமையான அடைவு பெற்றுத் திகழும் வகையில் பாடங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. ஆசிரியருக்கு வழிகாட்டும் முகத்தான் பாட அடிக்குறிப்புச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

மாணவர் தம்மைத் தாமே சோதித்து அறியும் வண்ணம் பயிற்சிகள் கொடுக்கப் பெற்றுள்ளன.

இப்பயிற்சிகளை முன்மாதிரியாகக் கொண்டு வகுப்புச் சூழ்நிலைக்கேற்ப ஆசிரியர் மேலும் பல பயிற்சிகளை உருவாக்கிக் கொள்ளுதல் நலம் பயக்கும்.

ஆண்டிறுதியில் மாணாக்கர் அடைய வேண்டிய குறைந்த அளவு கற்றல் திறன்களை அடையும் முகத்தான் ஆசிரியர்கள் இந்நூலினைச் செவ்வனே பயன்படுத்த வேண்டுகிறோம்.

**- ஆசிரியர் குழு**

# நூன் முகம்.....

புதுவை மாநிலத்தைச் சார்ந்த புதுவை, காரைக்கால் பகுதிகளில் அமைந்துள்ள கல்விக் கூடங்களில் பயின்று கொண்டிருக்கும் மாணவ, மாணவியர் அனைவரும் புதுவையின் வட்டார மொழியான **"தமிழ் மொழியைப்"** பயில வேண்டும் என்ற சீரிய நோக்கத்தால் உருவாக்கப் பெற்றதே இந்நூலாகும்.

கல்வித் துறை தகுதிமிக்க ஆசிரியர் குழுவை அமைத்து அவர்கள் மூலம் **"அறிமுகத் தமிழ்"** என்ற பெயருடன் இந்நூலை வெளியிடுகின்றது.

எட்டாம் வகுப்பு வரையில் தமிழை முதல் மொழியாகப் பயிலாத புதுவை மற்றும் காரைக்கால் கல்வி மாவட்டங்களைச் சார்ந்த மாணவ மாணவியர்க்கென்றே உருவாக்கப் பெற்ற நூலாகும் இது.

கல்விக் கூடங்கள் இந்நூலை வரவேற்று மாணாக்கர்க்கு அருந்தமிழைக் கற்பித்தல் மிகவும் நலம் பயக்கும்.

புதுச்சேரி

01.10.03

**க. தேவநீதிதாஸ்**
பள்ளிக் கல்வி இயக்குநர்
கல்வித்துறை,
புதுச்சேரி

# திறன் பட்டியல்

## முதல் நூலில் இடம் பெற வேண்டிய
## குறைந்த அளவு கற்றல் திறன்கள்

1. கேட்டல்
   (1) எளிய கேட்டறிந்தகேட்டறியாத பாடல்களையும் கதைகளையும் சொல்லக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்.
   (2) சூழ்நிலையில் நன்கு அறிந்த சிறிய வேண்டுகோள்களையும், அறிவுரைகளையும் புரிந்துகொண்டு செயல்படுதல்.
   (3) வாய்மொழியிலான விளையாட்டுகளையும் குழுச்செயல்களின் எளிய விதிமுறைகள், செயல் திட்டவேலைகள் ஆகியவற்றையும் கேட்டுச் செயல்படுதல்.

2. பேசுதல்
   (1) எளிய சொற்றொடர்களைத் திரும்பச் சொல்லுதல்.
   (2) எளிய பாடல்களைத் தனியாகவும் குழுவாகவும் திரும்பப் (நடிப்பின்றி/நடிப்புடன்) பாடுதல்.
   (3) பாடல்களையும் செய்யுள்களையும் ஒப்புவித்தல்.
   (4) சரியான உச்சரிப்புடன் எழுத்துகளையும் சொற்களையும் கூறுதல்.

3. படித்தல்
   (1) எழுத்துகளை அடையாளம் கண்டுபிடித்தல்.
   (2) மூன்று எழுத்துகளுக்கு மேற்படாத சொற்களைப் படித்தல்.
   (3) பாடல்கள் செய்யுள்கள் ஆகியவற்றை ஒலிநயத்துடன் படித்தல்.

4. எழுதுதல்
   (1) வரியொற்றி எழுதுதல்.
   (2) எழுத்துகளையும் சொற்களையும் எளிய தொடர்களையும் பார்த்தெழுதுதல்.
   (3) மூன்றெழுத்துகளுக்கு மேற்படாத சொற்களைச் சொல்ல எழுதுதல்.

5. சிந்தித்தல்
   (1) கேட்ட தகவல் சரியா, தவறா என எண்ணி விடையிறுத்தல்.
   (2) விடுகதைகளுக்கும் புதிர்களுக்கும் விடை கூறுதல்.
   (3) கதைகளைக் கேட்டு அவற்றின் உட்கருத்தை அறிதல்.

6. செயல் முறை இலக்கணம்
   (1) ஒன்று, பல என்னும் கருத்தை அறிதல்.


7. தானே கற்றல்
   (1) எளிய பட அகராதிகளைப் படக்கதைகளைப் பயன்படுத்தல்.

8. படைப்பாற்றல்
   (1) இடம் மாறிய சொற்களை முறைப்படுத்திக் கதை எழுதவைத்தல்
   (2) நிகழ்ச்சிகளை விவரித்தல்.

9. சொல்லாட்சி
   (1) ஏறத்தாழ 750 சொற்களைக் கற்றல்.


# பாடி மகிழ்வோம் வாருங்கள்!

## சிட்டு




சிட்டுச் சின்ன சிட்டு
செடியில் பாடும் சிட்டு
கொட்டைப் பாக்கைப் போலத்
தோன்றும் மஞ்சள் சிட்டு!

நெல்லு மூக்கைத் திறந்தே
அங்கும் இங்கும் பறந்தே
செல்லும் துள்ளி எங்கும்
செடியில் வந்து தங்கும்!



பூச்சி புழுவைத் தின்னும்
புதரில் கூடு கட்டும்
ஈச்சங் கொட்டை போல
இடுமே முட்டை சிட்டு!



—வாணிதாசன்

*குறிப்பு :* இசையுடன் பாடிக்குழந்தைகளை மகிழ்விக்க. மெய்ப்பாடுகளுடன் பாடிக்காட்டுக. சிறுசிறு வினாக்கள் வாயிலாகக் குழந்தைகளின் அறிதிறனை அறிக,

(எ–டு) **1. சிட்டு எதைப் போல் உள்ளது?**

**2. சிட்டின் மூக்கு எதைப் போன்றது?**


# கதையைக் கேட்டாயா?

## எது வலிமை?










தக்க மெய்ப்பாடுகளுடன் கதையை விளக்குக. சிறுசிறு வினாக்கள் வாயிலாக மாணவர்களின் அறிதிறனை அறிக. தக்க நடிப்புடன் கதையைத் திரும்பக் கூறச்செய்க. தேவையாயின் சுருள் படங்களைக் காட்டிக் கதையைக் கேட்க.

# சந்தைக்குப் போகலாமா?




❖ உழவர் சந்தையின் காட்சிகளை எளிய தொடர்களில் விவரிக்க. உரையாடல்களை வகுப்பறையில் நடத்திக் காட்டுக. சிறுசிறு வினாக்கள் கேட்க.

(எ—டு) : 1. உழவர் சந்தையில் என்னென்ன பொருள்களை வாங்கலாம்?

2. நீ என்னென்ன காய்கறிகள் பார்த்திருக்கிறாய்?

3. உனக்குப் பிடித்தமான காய்/கனி எது?

# உள்ளே வா... தம்பி




உள்ளே வா, தம்பி!



வணக்கம் சொல்!



எழுந்து நில்!



நிமிர்ந்து நட!




ஓடு!




குதி!



வாயைத்திற!




புத்தகத்தைத் திற!



கரும்பலகையில் எழுது



கைகளை உயர்த்து!



நன்றி... சொல்!

உரக்கப் பேசு!
கைகளைச் சுழற்று!
கையை மூடித் திற!
விரல்களை மடக்கிக் குவி!
விரல்களைக் குவித்து விரி!
மணிக்கட்டைச் சுழற்று!

❖ பேசுதல், படித்தல், எழுதுதலுக்கு ஆயத்தம் செய்யும் வகையில் மேற்கண்டவாறு கட்டளைகள் பிறப்பித்துச் செயல்படச் செய்க. அன்பும், கனிவும் கலந்த சொற்களால் நயமாகக் கட்டளையிடுக.


# நான்தான் பூனை!..... மியாவ்!

## தனி விளையாட்டு


மாணவர்களே! நாய், பூனை, பசு, கிளி, கோழி எனக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.
ஒவ்வொருவரும் விலங்கு/பறவை போல் ஒலி எழுப்பி நடித்துக் காட்டுங்கள்.



நான் தான் பூனை! ..... மியாவ்!........



நான் தான் பசு! ..... அம்மா!........



நான் தான் கோழி! ..... கொக்கரக்கோ!.......



நான் தான் கிளி! ..... அக்கா!... அக்கா!.. அக்கா!...

(அ) கீ! கீ! கீ!.......

## குழு விளையாட்டு

5 அல்லது 10 மாணவர்கள் ஒன்று சேர்க. ஒருவர் பின் ஒருவராக நிற்க. முன்னவன் தோள் பட்டை மீது கை வைத்தோ, சட்டையைப் பிடித்தோ தொடர் வண்டிபோல் ஒசை எழுப்பியும், செய்கை செய்தும் ஓடிக்காட்டுக.





நாங்கள் தான் தொடர்வண்டி....... ஜிக்புக்! ஜிக்புக்! ஜிக்புக்!

- சூழலுக்கும், இடவசதிக்கும் ஏற்ப இந்தத் தனி/குழு விளையாட்டுகளை வகுப்பறைக்கு உள்ளோ/வெளியிலோ திட்டமிட்டு அமைத்துச் செயல்படுக.

# கண்டு மகிழ்வோம்


(மாணவர் விலங்குக் காட்சிச் சாலைக்கு மகிழுலாச் சென்றனர். அங்கு உள்ள பல்வேறு விலங்குகளையும், பறவைகளையும், பிற உயிரினங்களையும் கண்டு மகிழ்ந்தனர். அப்போது அமுதன், அன்பன் என்னும் இரு சிறுவர்கள் நிகழ்த்திய உரையாடல்.)





அமுதன் : ஓ! அந்த யானையைப் பார்.
எவ்வளவு பெரிது!

அன்பன் : ஆமாம், ஆமாம். பல்லைப் பார்.
நீட்டாக உள்ளது.



அமுதன் : பல் வெள்ளையாக உள்ளது. அது பல் விளக்குமா?

அன்பன் : பல் விளக்கினால்தான் வெள்ளையாக இருக்கும்.

அமுதன் : அங்கே பார். குட்டி யானை தண்ணீரை மேலே ஊற்றிக் கொள்கிறதே. குளிக்கிறதா?

அன்பன் : அதன் மேலே எல்லாம் அழுக்கு. அதனால் அது குளிக்கிறது.

அமுதன் : இது தானாகவே குளிக்கிறது. என்னை என் அப்பாதான் குளிப்பாட்டுவார்.



அன்பன் : என்னை அம்மாதான் குளிப்பாட்டுவார். நாளைக்கு நானே குளிப்பேன்.

அமுதன் : நானும் தானாகவே குளிப்பேன்.

**பயிற்சி :**

1. விலங்குக் காட்சிச் சாலையில் உள்ள விலங்குகள் தொடர்பாக மாணவர் ஒருசில தொடர்கள் பேசுதல்.
2. வீட்டு விலங்குகள் தொடர்பாகவும் பேசுதல்.

# ஆடுவோம்! பாடுவோம்!


*மயிலே! மயிலே!! நீ ஆடு!*

*மானே! மானே!! நீ ஓடு!*




*குயிலே! குயிலே!! நீ பாடு!*

*கொக்கே! கொக்கே!! இரை தேடு!*





*கோழி! கோழி!! நீ கூவு!*

*குரங்கே! குரங்கே!! நீ தாவு!*



*தோழி! தோழி!! விளையாடு!*

*சோடிப் புறாவே! பறந்தோடு!*




**பயிற்சி :**


1. பாடலைக் குழுவாகவும், தனியாகவும் பாடுதல்.
2. விலங்குகள்/பறவைகள் போல் நடிப்புடனும் நடிப்பின்றியும் பாடுதல்.
3. பல்வேறு செயல்களை அறிதல்.
4. மாணவர் தமக்குத் தெரிந்த செயல்களைச் செய்துகாட்டி அவற்றைப் பற்றி ஒருசில தொடர் பேசுதல்.

# சரியாகச் சொல்லுவோம்! சரியாகப் பேசுவோம்!!

காலில் இடித்தது கல்

கையில் குத்தியது முள்









கண்ணன் தின்பது வெண்ணெய்


நாட்டை ஆள்வார் மன்னர்


அன்புக்குரியோர் நண்பர்

இனிக்கும் பொருளே வெல்லம்

தண்ணீர் பெருகினால் வெள்ளம்











விரும்பி உண்பது பழம்

வேண்டாம் உனக்குப் பயம்

மாட்டுக்கு இருப்பது வால்

மரத்தை அறுப்பது வாள்







**பயிற்சி :**

1. மாணவர் சரியான ஒலிப்புடன் சொற்களையும் எழுத்துகளையும் கூறுக.
2. இவைபோல் ஒத்த ஒலியுள்ள சொற்கள் சிலவற்றைக் கண்டறிக.

# ஆத்தி சூடி





அச்சம் தவிர்.

ஆண்மை தவறேல்.

இளைத்தல் இகழ்ச்சி

ஈகை திறன்

உடலினை உறுதிசெய்

ஊண் மிக விரும்பு.

எண்ணுவது உயர்வு

ஏறுபோல் நட.






ஐம்பொறி ஆட்சிகொள்.

ஒற்றுமை வலிமையாம்.

ஓய்தல் ஒழி.

ஔடதம் குறை.


- சுப்பிரமணிய பாரதியார்



**பயிற்சி :**

1. மாணவர் தனியாகவும், குழுவாகவும் இசையுடன் கூறச் செய்க.
2. தேவைப்படும் இடங்களில் உரியவாறு நடித்துக் காட்டுக.
3. பலமுறை பாடி மனத்தில் பதியவைத்துக் கொள்க.
4. ஆத்திசூடி அகர வரிசையில் அமைந்துள்ளமையைக் கவனித்து மனத்தில் நிறுத்துக.

# வரைந்து பழகுவோம்!




எழுதுதலுக்கு முன் ஆயத்தமாக இவைபோன்ற கோடுகள், வளைவுகள், வடிவங்களை வரைந்து பழகச் செய்க.


# படிப்போம்! எழுதுவோம்!



படம்



பட்டம்



பட்டாசு



டமாரம்


பட் பட் பட் பட
டம் டம் டம டம
பட் பட் பட் பட்டாசு
டம் டம் டம் டமாரம்

பட்டம் எடுத்துப் பறக்கவிடு
பம்பரம் எடுத்துச் சுழற்றிவிடு.


ட ட ப ப ம ம டி பி மி

**குறிப்பு :**

- படிப்போம் எழுதுவோம் பகுதிகளில் வரும் ஒவ்வொரு படத்தைப் பற்றியும் பல கேள்விகள் கேட்டுக் குழந்தையைப் பேசத் தூண்டுக.
- படங்களை இணைத்துக் கூடுதல் செய்திகளையும் கற்பனைக் கதைகளையும் கூறச்செய்க.
- பாடங்களில் அறிமுகமாகும் எழுத்துகளுள்ள வேறு பல சொற்களையும் கூறச்செய்க. அச்சொற்களில் அறிமுக எழுத்துகளை அடையாளம் காணச்செய்க.



மாமரம்




பாய்



பாப்பா



பம்பரம்




யாழ்

மரம் மரம் மாமரம்
பழம் பழம் மாம்பழம்

பாப்பா பாட்டுப் பாடலாம்
பழத்தை உண்டு மகிழலாம்
யாழின் இசையைக் கேட்கலாம்.

ய யா ர ரா ழ ழா


## படத்துக்கு ஏற்ற சொல்லைக் கோடிட்டு இணை.




பாய்



பட்டம்



பட்டாசு



பம்பரம்


## அறிமுக எழுத்துகளை வட்டம் இடுக

ப(ழ)ம் – (ழ)

மா ம ர ம் – (ர)

ட மா ர ம் – (ட)


பா ய் – (பா)



சக்கரம்



காகம்



தச்சர்




தாத்தா


| | |
|---|---|
| மரம் | மாடம் |
| படம் | பாடம் |
| கரகம் | தகரம் |

விளக்கு வைக்க மாடம்
விரும்பிப் படிப்பாய் பாடம்
தலையில் ஆடும் கரகம்
தண்ணீர்க் குவளை தகரம்

ச சா க கா த தா



மாங்காய்



பந்தம்

நகம் நாகம் நாடகம்

தந்தம் தங்கம் சங்கம்

தங்கம் தா நாடகம் பார்

மாங்காய் பறி தாத்தா தடி

சங்கம் சங்கம்


தமிழ்ச் சங்கம்!

சங்கத் தமிழன்

தமிழ்ச் சிங்கம்!

ங ந நா ற றா


## படத்திற்குப் பொருத்தமான சொல்லை வட்டமிட்டுக் காட்டு

சக்கரம், மாங்காய், கப்பல் 

 நகம், தடி, பந்து



படம், பழம், கரகம் 

 காகம், சந்தனம், தங்கம்


நாகம், நாடகம், சக்கரம் 

 தச்சர், தாத்தா, தங்கம்


## முதல் எழுத்தைப் படத்துடன் கோடிட்டு இணை


| | | | |
|---|---|---|---|
| தா | ப | கா | பா |



மலர்



பலா



வயல்



வானம்

கலா நிலா

வனம் வாரம்

சன்னல் மன்னா


கலா இங்கே வா

நிலா முகம் பார்


ல லா வ வா ன னா



ஞமலி



காளான்



மேளம்



தாளம்

| | |
|---|---|
| கண் | ஞாயிறு |
| களம் | கண்ணாடி |
| வாள் | வள்ளல் |


வள்ளல் பாரி


கண்ணாடி பார்

ஞாயிறு போற்று


ஞ ஞா ண ணா ள ளா


## கட்டங்களில் தகுந்த எழுத்தை எழுது.





| | | | |
|---|---|---|---|
| | | வ | |
| | | ய | |
| | கா | | |
| | | | |
| ச | ன் | | |






## படத்திற்குரிய சொல்லை எழுதித் தொடரைப் படி


(எ–டு)



மாமரம்



____________ மணம்







____________ வால்



____________ முகம்

# விளையாடிக் கற்போம்-1

## வரைவோம் விளையாடுவோம்


குறிப்பு : குழந்தைகளை இவற்றுள் நான்கு படங்களை வரையச் செய்க! படங்களின் பெயர்களைச் சொல்லுக! படங்களைச் சரியாக வரைந்தவர்களை அப்படங்களின் மேல் (✓) குறியிடச் செய்க. நான்கு படங்களிலும் முதலில் சரியான குறியிட்டவர் வெற்றி பெற்றவர், அவரைப்பாராட்டுக. இவ்விதமே இவ்விளையாட்டை அமைத்துக் கொள்க!

## குழுவிளையாட்டு - வரிசைப்படுத்துவோம்

அறிமுக எழுத்துகளை எழுதிய அட்டைகளைக் குழு உறுப்பினர்கள் எடுத்துக்கொள்க. ஆசிரியர் ஒரு சொல்லைக் கூறுக. அதற்கான எழுத்துகளைக் கொண்டவர்கள் வரிசையாக நிற்க.

(எ–டு)

ப ந் த ம்

ப ழ ம்

பா ய்

ப பா த ழ ம் ய் ந்

# வானம் கறுத்தால் மழை பெய்யும்

வானம் கறுத்தால் மழை பெய்யும்
மழை பெய்தால் மண் குளிரும்
மண் குளிர்ந்தால் புல் தழைக்கும்
புல் தழைத்தால் பசு மேயும்
பசு மேய்ந்தால் பால் சுரக்கும்
பால் சுரந்தால் கன்று குடிக்கும்
கன்று குடித்து மிஞ்சியதைக்
கறந்து கொண்டு வந்திடலாம்.
காய்ச்சி நாமும் குடித்திடலாம்.

*-கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை*



அம்மா




ஆலமரம்

| | |
|---|---|
| அப்பா | ஆண் |
| அவல் | ஆழம் |
| அக்காள் | ஆப்பம் |
| அண்ணன் | ஆட்டம் |
| அரசமரம் | ஆகாயம் |






அகல்



ஆலயம்

அம்மா ஆப்பம் சுடுவாள்
அப்பா உண்டு மகிழ்வார்
கதிரவன் காய்ந்திடும் பகல்
கடவுளுக்கு ஏற்றிடும் அகல்.

அ அ ஆ ஆ

இஞ்சி மிதிவண்டி கிளி

| | | |
|---|---|---|
| படி | நரி | விழி |
| நிறம் | கணினி | விசிறி |


இஞ்சி மிட்டாய்

மிதிவண்டிப் பயணம்


பல வண்ணக் கிளி

அணில் கடித்த பழம்

இ இ கி ணி தி



ஈ




ஈட்டி



கீரி



நீச்சல்



இளநீர்

| | | |
|---|---|---|
| ஈரம் | தீரம் | மீனம் |
| சீரகம் | நீலம் | கண்ணீர் |

நீல வானம்

ஈர நிலம்

தீரச் செயல்

ஈ கீ ணீ தீ நீ மீ வீ

# வகைப்படுத்தி எழுது

மாடு மயில் காகம் குயில்

யானை சேவல் குதிரை பூனை


| பறவைகள் | விலங்குகள் |
|---|---|
| 1. மயில் | 1. யானை |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |

## குழுவில் சேராத சொல்லை வட்டமிட்டுக் காட்டுக


1. அப்பம் கோழி வடை

2. பழம் பட்டம் பம்பரம்


3. அரசமரம் அகல் ஆலமரம்



உரல்



குருவி



முயல்

| | |
|---|---|
| உப்பு | வயிறு |
| உழவர் | புற்று |
| கழுகு | முறுக்கு |
| கதவு | கணு |


பாட்டி சுட்ட முறுக்கு

பக்குவமாய் இருக்கு

வாயில் போட்டு நொறுக்கு


உ கு சு டு ணு பு

குளத்தில் சிறுவர் குளிக்கிறார்.
மூழ்கி மூழ்கிக் களிக்கிறார்.







கூத்து ஆடிக் காட்டுகிறார்.
கூடிப் பார்த்து மகிழ்கிறார்.



பூனை



சூலம்




மூக்கு

| | | |
|---|---|---|
| ஊசி | கூடு | பூட்டு |
| குண்டூசி | முட்டை | உள்ளூர் |
| | விண்ணூர்தி | |


ஊ கூ சூ டூ ணூ பூ மூ ளூ



எருது



கெண்டி



செவி



மெழுகு


| | | |
|---|---|---|
| செடி | தென்னை | பெட்டி |
| செக்கு | நெல் | மெட்டி |

| | | |
|---|---|---|
| தேங்காய் | காய்க்கும் | தென்னை |
| செக்கில் | ஆடிய | எண்ணெய். |


எ செ தெ நெ பெ மெ




சேவல்



கேணி




ஏணி



வேல்

| | |
|---|---|
| **வேல்** | **ஏற்றம்** |
| **ஏர்** | **சேய்** |
| **தேன்** | **பேரன்** |
| **மேகம்** | **வேந்தன்** |


சேவல் கூவும் காலை






உழவர் செல்லும் சாலை

நீர் சுரக்கும் கேணி





ஏற்றிவிடும் ஏணி

# ஏ கே சே தே பே மே வே

## சொற்களை உரிய கட்டங்களுக்குள் பிரித்து எழுது

ஆலமரம்

ஆப்பம்

இஞ்சி

ஆலை

ஈ


| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஈ | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

## சொற்களைப் பொருத்தமான கட்டத்தில் எடுத்து எழுது


இஞ்சி அப்பா இளநீர்

நிறம் தீபம் மான்


| ா | ி | ீ |
|---|---|---|
| அப்பா | நிறம் | இளநீர் |
| | | |




ஐவர்



பை



கை



நத்தை


| | |
|---|---|
| தை | மை |
| விதை | வைகறை |
| வளமை | முதலை |

வைகறைத் துயிலெழு!


வளம் காண உழைத்திடு!

வறியோர்க்குக் கைகொடு!


ஐ கை பை மை வை




ஒட்டகம்



கொக்கு



மொட்டு




தொப்பி


| | |
|---|---|
| நொய் | நொடி |
| கொடி | கொம்பு |
| மொழி | தொட்டி |
| மொச்சை | தொலைக்காட்சி |

வெயிலுக்கு அணிவது தொப்பி
மையை ஊற்றிடக் குப்பி
மாட்டுக்கு இருப்பது கொம்பு
மனத்துக்கு வேண்டும் தெம்பு

ஒ கொ மொ தொ நொ




ஓடம்



கோழி



தோட்டம்



சோளம்


| | |
|---|---|
| ஓணான் | நோன்பு |
| சோறு | சோலை |
| கோட்டம் | கோலம் |
| தோப்பு | தோகை |

தோகை விரிப்பது மயிலாம்
தோப்பில் இசைப்பது குயிலாம்
சோலையில் கிளிகள் பேசும்
சுகமாய்த் தென்றலும் வீசும்


ஓ கோ சோ தோ நோ




ஔவையார்



கௌதாரி



வௌவால்



பௌர்ணமி

வெற்றிலைக் கௌளி

பௌவம் (கடல்)

ஔடதம் (மருந்து)

எஃகு

ஔடதம் குறைப்பது நலமாம்
ஔவை சொல்லே வளமாம்
எஃகு போன்ற மனமே
இருப்பது என்றும் நலமே!

# ஔ கௌ பௌ ஃ

## பொருத்தமான எழுத்தால் நிரப்புக

(தை, தொ, லை, கோ, வை)


1. வி ____ ஊன்று
2. ____ ப்பி போடு
3. பா ____ க் குடி
4. ____ ழியைப் பிடி.
5. கத ____ த் திற.

## சொற்களை உரிய கட்டங்களில் எடுத்து எழுதுக

| | | | |
|---|---|---|---|
| கொடி | கோழி | மொட்டு | சோறு |
| செடி | சேவல் | மொழி | தோகை |
| பெண் | தேர் | சொல் | சோலை |

| ெ | ே | ெ...ா | ே...ா |
|---|---|---|---|
| | | | |


# வடமொழி எழுத்துகள்



ரோஜா

என் பெயர் புஷ்பா

என் தம்பி பெயர் ஜவஹர்



ஸர்ப்பம்

ஸர்ப்பம் விஷம் கொண்டது.



ஜாடி

ஜாடியில் புஷ்பம் பூத்தது.

ஷாஜகான் கட்டிய தாஜ்மஹால்

ஜூன் மாதம் பள்ளி செல்வோம்

ஜிலேபி சுவைத்துப் பார்

கீழ்க்கண்ட எழுத்துகளைக் கொண்ட சொற்களை எடுத்து எழுதுக.

ஷ ஜி ஜூ ஸ ஹ ஜா

புஷ்பா ______ ______

______ ______

______ ______

# போட்டி காண வாரீர்!





**கொழுகொழுக்**
**குழந்தைகள் போட்டி**

**இடம் : அண்ணா திடல்,**
**புதுச்சேரி.**

**நேரம் : மாலை 5.00 மணி**

**போட்டி காண வாரீர்!**




**விடை கூறு :**

1. போட்டியின் பெயர் என்ன?
2. போட்டி எங்கே நடைபெறுகிறது?
3. போட்டியின் ஆரம்ப நேரம் என்ன?
4. உனக்குப் பிடித்த விளையாட்டு எது?
5. நீ எந்தப் போட்டியில் கலந்து கொள்வாய்?


# விடுகதைக்கு விடை காண்போம்!



குழந்தை கொஞ்சும் 'மை'




கையில் கட்டும் 'ஆரம்'



கண்ணுக்கு அணியும் 'ஆடி'

இனிப்பைத் தரும் 'ஈ'





நகர்ந்து செல்லும் 'தை'



வாயில் உள்ள 'கை'




குதிரையை ஓட்டும் 'டை'




முதலில் படங்களைக் காட்டிப் பெயர்களைக் கேட்க.
பின்னர்ப் புதிர்களுக்கான விடைகளைக் கேட்க.


# விட்டுக் கொடுத்து வாழலாமே !.....




ஆற்றில் பாலம் ஒன்று இருந்தது. ஆடுகள் இரண்டு எதிர் எதிரே வந்தன. பாலத்தைக் கடக்க முயன்றன.



போட்டியிட்ட ஆடுகள் முட்டிக் கொண்டு ஆற்றில் விழுந்தன.



வளைந்து கொடுத்த ஆடுகள் பாலத்தைக் கடந்து கரை ஏறின.




விட்டுக்கொடுத்த ஆடுகள் வீடுபோய்ச் சேர்ந்தன.


நீயும் விட்டுக் கொடுத்து வாழலாமே?

* படத்தைக் காட்டிக் கதையைக் கூறுக.
* கதையைத் திரும்பக் கூறச்செய்க.
* சிறு சிறு வினாக்கள் வாயிலாக மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுக.
* படத்தைக் காட்டிச் சிறுவர்களின் கற்பனைக் கேற்ப வேறு வேறு கதைகளும் கூறச் செய்க.
* கதையின் நீதியை அறியும் விதமாகத் தூண்டுக.


# 'ஒன்று', 'பல' அறிதல்



மாடு




மாடுகள்




ஈ




ஈக்கள்




எலி



எலிகள்



எறும்பு



எறும்புகள்

**நாய் ஓடியது**

**நாய்கள் ஓடின**

**ஒருமை, பன்மையை வேறுபடுத்திக் காட்டுக.**

# நுங்கில் எனக்கும் பங்கு!

சங்கு சங்கு சங்கு
ஊதும் ஆலைச் சங்கு!
நுங்கு நுங்கு நுங்கு
நுங்கில் எனக்கும் பங்கு!

ஆடு ஆடு ஆடு
ஆட்டம் போட்டு ஆடு!
கூடு கூடு, கூடு
கூடி வாழக் கூடு!


ஓடு ஓடு ஓடு
ஓடு போட்ட வீடு!
பாடு பாடு பாடு
பாட்டை நன்றாய்ப் பாடு!


**இப்பாடலில் ஒரே ஒலியில் வரும் சொற்களை எடுத்து எழுதுக**


| சங்கு | ஆடு |
|---|---|
| ____________ | ____________ |
| ____________ | ____________ |
| ____________ | ____________ |


# அறிவு தரும் அகராதி


## அ) பட அகராதி



ஏற்றம்


ஒட்டகம்




ஓடம்


கணினி




கரடி


கலப்பை




காவடி

சல்லடை







சிறுத்தை

தராசு



நங்கூரம்

வானூர்தி


ஆ) பட விளக்க அகராதி

| படம் | சொல் | பொருள் |
|---|---|---|
|  | செவி | காது |
|  | ஞாயிறு | சூரியன் |
|  | தோகை | மயில் இறகு |
|  | நாவாய் | பெரிய கப்பல் |
|  | பூமி | உலகம் |
|  | வண்ணத்துப் பூச்சி | பட்டாம்பூச்சி |





# கதை எழுதிக் களிப்போம்!

| | | |
|---|---|---|
| 1 புறாவும் | 2 புறா | 3 எறும்பைப் |
| 4 எறும்பு | 5 எறும்பும் | 6 பார்த்தது |
| 7 ஆற்றில் | 8 நட்பாக | 9 இருந்தன |
| 10 தவறி | 11 விழுந்தது | 12 இலையைக் |
| 13 கரையில் | 14 வந்து | 15 கொத்திப் |
| 16 சேர்ந்தது | 17 போட்டது | |

* கீழ்க்கண்ட வரிசை எண்படி சொற்களை இணைத்துக் கதை எழுதுக.
* விரும்பும் தலைப்புக் கொடுக்க.

**1, 5, 8, 9** | **4, 7, 10, 11** | **2, 3, 6** | **12, 15, 17** | **4.13.14.16**


# நிறங்கள்

| | | |
|---|---|---|
|  | மல்லிகைப்பூ | வெள்ளை நிறம் |
|  | தக்காளிப்பழம் | சிவப்பு நிறம் |
|  | வாழைப்பழம் | மஞ்சள் நிறம் |
|  | வானம் | நீல நிறம் |
|  | கத்தரிப்பூ | ஊதா நிறம் |
|  | குயில் | கருப்பு நிறம் |
|  | வெற்றிலை | பச்சை நிறம் |

**வண்ணங்கள் ஏழு**
**கடவுளின் படைப்பு**


*குறிப்பு* : மாணாக்கரைப் பலமுறை படிக்கச் செய்க.
பார்க்காமல் சொல்லச் செய்க.

# சுவைகள்




கரும்பு இனிக்கும்

**இனிப்பு**




பாகற்காய் கசக்கும்

**கசப்பு**



புளியங்காய் புளிக்கும்

**புளிப்பு**




மிளகாய் காரும்

**கார்ப்பு**



உப்பு உவர்க்கும்

**உவர்ப்பு**



பாக்கு துவர்க்கும்

**துவர்ப்பு**

## சுவைகள் ஆறு
## சுவைத்துப் பாரு

*குறிப்பு :* தெளிவாகப் பலமுறை படிக்கச் செய்க. ஆறுசுவைகளையும் மனப்பாடமாகச் சொல்லச் செய்க. ஆறு சுவைகளையும் பார்த்து எழுதச் செய்க. சொல்வதெழுதல் எழுதச் செய்க.

## கிழமைகள்

1. ஞாயிறு
2. திங்கள்
3. செவ்வாய்
4. புதன்
5. வியாழன்
6. வெள்ளி
7. சனி

## தமிழ் மாதங்கள்

1. சித்திரை
2. வைகாசி
3. ஆனி
4. ஆடி
5. ஆவணி
6. புரட்டாசி
7. ஐப்பசி
8. கார்த்திகை
9. மார்கழி
10. தை
11. மாசி
12. பங்குனி

## ஆங்கில மாதங்கள்

1. ஜனவரி
2. பிப்ரவரி
3. மார்ச்
4. ஏப்ரல்
5. மே
6. ஜூன்
7. ஜூலை
8. ஆகஸ்டு
9. செப்டம்பர்
10. அக்டோபர்
11. நவம்பர்
12. டிசம்பர்

காலப்பெயர்களைத் திரும்பத் திரும்பக் கூறச்செய்க.
மனப்பாடம் செய்யும் வகையில் தொடர் பயிற்சி தருக.

## உயிர் எழுத்து வரிசை அறிதல்

**அ** றிவே செல்வம்

**ஆ** ற்றலைப் பெருக்கு!

**இ** ன்னிசை பயில்!

**ஈ** தலே சிறப்பு.

**உ** ழைப்பே உயர்வு.

**ஊ** ரார்க்கு உதவு.

**எ** ளிமையே பெருமை.

**ஏ** ர்த் தொழில் போற்று.

**ஐ** ந்தில் கற்றிடு!

**ஒ** ற்றுமை வளர்த்திடு!

**ஓ** வியம் பழகு!

**ஔ** வை நெறி நில்!

குறிப்பு : மேலே உள்ள அகர வரிசைப் பாடலைப் பலமுறை பாடச் செய்க.

# மெய்யெழுத்து வரிசை அறிதல்

மு **க்** கனி முத்தமிழ்

ச **ங்** கத் தமிழ் பயில்!

அ **ச்** சம் தவிர்.

கெ **ஞ்** சுதல் இகழ்ச்சி.

எ **ட்** டிடு அறிவை!

க **ண்** ணாம் கல்வி

மு **த்** தாய் எழுது!

மு **ந்** துக உயர்ந்திட

அ **ப்** பா சொற் கேள்!

அ **ம்** மா தெய்வம்.

மெ **ய்** யே பேசு!

சீ **ர்** பட ஒழுகு!

வெ **ல்** லுக உலகை!

வெ **வ்** வுரை அகற்று!

வா **ழ்** வில் வெற்றிகொள்!

த **ள்** ளுக கீழ்மை!

க **ற்** ற வழி நட!

பொ **ன்** னாம் காலம்.

# தமிழ் எழுத்துகளின் வரிசை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
| க் | க | கா | கி | கீ | கு | கூ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ |
| த் | த | தா | தி | தீ | து | தூ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ |

*எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்*

| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|
| கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| பெ | பே | பை | பொ | போ | பௌ |
| மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| னெ | னே | னை | னொ | னோ | னௌ |

*ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு*

# தமிழ் எண்கள்

| | | |
|---|---|---|
| க | 1 | ஒன்று |
| உ | 2 | இரண்டு |
| ௩ | 3 | மூன்று |
| ௪ | 4 | நான்கு |
| ரு | 5 | ஐந்து |
| ௬ | 6 | ஆறு |
| எ | 7 | ஏழு |
| அ | 8 | எட்டு |
| ௯ | 9 | ஒன்பது |
| க0 | 10 | பத்து |

புதுவை மகளிர் கூட்டுறவு அச்சகம். புதுச்சேரி-1.
போன் : 2333451.

விலை 12-50